# بـذل الـمـسـاعـي

## في شـرح

## رسـالـة في اعـتـقـاد الامـام الـشـافـعي

## الامام ابوالحسن بن حممد الهكاري - المتوفى ٤٨١هـ

## تأليف: عبدالعزيز بن عبدالله الراجحي

# அகீதா

## இமாம் ஷாபிஃ(ரஹ்)

**அரபி மூலம் ஆசிரியர்: அஷ்ஷைக். அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் அர்ராஜிஹி**

---

**தொடர்-01**

## நூல் அறிமுகம்

**தமிழ் விளக்க வகுப்பு ஆசிரியர்: மவ்லவி. முஜாஹித் பின் ரஸீன்**

**நாள்: 02/10/2017 - திங்கட்கிழமை** **இடம்: ரக்கா இஸ்லாமிய நிலைய வளாகம்**

இமாம் ஷாபிஃ(ரஹ்) அவர்களின் அகீதா பற்றிய செய்திகளை இமாம் அவர்களின் வார்த்தையிலிருந்து அறிவிப்பாளர்கள் தொடரின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட நூல்: **بذل الـمساعي** - رسالة في اعتقاد الامام الشافعي

இமாம் ஷாபிஃ(ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 150ம் ஆண்டு பலஸ்தீனத்தில் காஸா நகரில் பிறந்தார்கள் சுமார் 54 வருடங்கள் வாழ்ந்தார்கள், ஹிஜ்ரி-204ல் எகிப்தில் மரணமடைந்தார்கள்.

இமாம் ஷாபிஃ(ரஹ்) அவர்களின் மரணத்திற்கு பின் சுமார் 200 வருடங்களுப்பிறகு அவர்களின் அகீதா பற்றிய செய்திகளை இமாம் அபுல் ஹஸன் அலி பின் அஹமத் அல்-ஹக்காரி முதல் முதலில் தொகுத்தார்கள். இவர் இராக்கில் உள்ள மவ்ஸில் பகுதியை சேர்ந்தவர் மேலும் குர்தி இனத்தவர் ஆவார்.

அதே போன்று இமாம் முஹம்மத் இப்னு அப் யஃலா அவர்கள் தனது தபகாதுல் ஹனாபிலா என்ற நூலில் இமாம் அபுல் தாலிப் உஷாரி வழியாகவும் (ஒரு பகுதியாக) இமாம் ஷாபிஃ(ரஹ்) அவர்களின் அகீதா பற்றிய செய்திகளை தொகுத்துள்ளார்கள்.

ஹதீஸ் கலை துறையின் இமாம்கள் மத்தியில் இமாம் அபுல் ஹஸன் அலி பின் அஹமத் அல்-ஹக்காரி அவர்கள் பலவீனமானவர் என்ற போதிலும் இவர் தொகுத்த இமாம் ஷாபிஃ(ரஹ்)-யின் அகீதா பற்றிய செய்திகளில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. மேலும் பல்வேறு இமாம்கள் அபுல் ஹஸன் அல்-ஹக்காரியைப் பற்றி சிலாகித்து கூறியுள்ளார்கள். அவற்றில் சில அதிகமான இபாதத் செய்யக்கூடியவர், உலக பற்றில்லாதவர், மிக கண்ணியமானவர் என்று இமாம் ஸம்ஆனி அவர்களும், மிகவும் உலக பற்றில்லாதவர் என்று இமாம் தஹபி அவர்களும் கூறியுள்ளார்கள்.

இந்த வகுப்பிற்கு இமாம் அபுல் ஹசன் அல்-ஹக்காரி அவர்களின் **بذل الـمساعي** - رسالة في اعتقاد الامام الشافعي இந்த நூல் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு காரணம் இது தனி நூல் வடிவிலான தொகுப்பாக இருப்பதனால்.

மேற்சொன்ன இரண்டு இமாம்கள் தொகுத்த இமாம் ஷாபிஃ(ரஹ்) அவர்களின் அகீதா பற்றிய செய்திகள் அனைத்தும் அறிவிப்பாளர் தொடருடன் இமாம் அர்ரபீஃ பின் சுலைமான் அவர்களிடம் முடிவடையும். இமாம் அர்ரபீஃ அவர்கள் இமாம் ஷாபிஃ(ரஹ்) அவர்களின் மிக சிறந்த மாணவர்களில் ஒருவராவர் மேலும் கிதாபுல் உம்மு (இமாம் ஷாபிஃ(ரஹ்) அவர்களின் கூற்றுகளை) தொகுத்தவர்.

பொதுவாக பொதுமக்கள் மத்தியில் ஹதீஸிக்கு மட்டும்தான் அறிவிப்பாளர் தொடர் உள்ளன என்ற

எண்ணம் உண்டு. ஆனால் உண்மை என்னவென்றால் இது போன்று இமாம்களின் கூற்றிற்க்கும் அறிவிப்பாளர் தொடர்கள் மற்றும் அறிவிப்பாளர் பற்றி கூடுதல் செய்திகளும் பதியப்பட்டுள்ளன என்பதை கவனத்தில் கொள்ளவும்.

குறிப்புகள்:

1. பெரும்பாலான ஷாபிஃ மத்ஹபை பின்பற்றக் கூடிய மக்கள் மூன்று இமாம்களை அதாவது பிஃஹ்க் (மார்க்க சட்டத்திற்கு) இமாம் ஷாபிஃ(ரஹ்), அகீதாவிற்கு அபுல் ஹஸன் அஷ்அரியையும், தாரீக்காவிற்கு ஏதாவது ஒரு இமாமையும் பின்பற்றுவர்கள். விதிவிலக்காக அரபுலகை சார்ந்தவர்கள் பிக்ஹ் (மார்க்க சட்டத்திற்கு) இமாம் ஷாபிஃ(ரஹ்), அகீதா–விற்கு ஸலபு இமாம்களையும் பின்பற்ற கூடியவர்களாக உள்ளனர்.

2. இமாம் அபூ ஹனிபா(ரஹ்)–வின் கூற்றின் அடிப்படையில் அகீதா நூல்கள் இல்லை. இமாம் அபூ ஹனிபா(ரஹ்) பற்றி ஹதீஸ் கலை துறையினர் (மனனத்தின் அடிப்படையில்) பலகீனமானவர் இதனை ஹனபி மதஹபை சார்ந்தவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதே நேரம் இமாம் அபூ ஹனிபா(ரஹ்) எந்த புத்தகங்களும் எழுதவில்லை, இதை வைத்து அவர்களை குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது. காரணம் அக்காலத்தில் புத்தகத்திற்கான தேவையில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

3. ஸஹாபாக்களின் இறுதிக் கால பகுதியில் அதாவது பல இளம் வயது ஸஹாபாக்கள் வாழும் போது அகீதா தொடர்பான பிரச்சனைகள் தோன்றியதால் அக்காலகட்டதில் அகீதா பற்றி அதிகமாக பேசப்பட்டது.

-----